Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.64/2024**

**Deposition of PW.3 (**கூடுதல் சாட்சி**-1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேக் அப்துல்லா | ஜாதி | : | |
| த/பெ | : | | தொழில் | : | சார்பு ஆய்வாளர், செம்பட்டி காவல்நிலையம் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | 38/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026.

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்பொழுது செம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திருமதி. கீதா என்பவர் பணிமாறுதல் காரணமாக வேறு காவல் நிலையத்திற்கு சென்று விட்டதால் அவருக்கு பதிலாக நான் சாட்சியமளிக்கிறேன். அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும், வழக்கு கோப்புகளை பார்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 15.09.2018 அன்று மணியளவில் மேற்சொன்ன காவல் ஆய்வாளர் திருமதி. கீதா என்பவர் நிலையப் பொறுப்பில் இருந்த போது, சின்னத்துரை மகன் கணேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று மனு எண்.238/2018 வழங்கினார். பின்னர் 18.09.2018 அன்று அந்த புகாரின் தன்மைக்கேற்ப செம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.270/2018, இதச சட்டபிரிவுகள் 294(b), 324 படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.2/PW.3)** ஆக குறியிடு செய்யப்படுகிறது. அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.3/PW.3)** ஆக குறியிடு செய்யப்படுகிறது.

பின்பு அன்றையதினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் மலைச்சாமி, சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து மாதிரிவரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். அந்த மாதிரிவரைபடம் **(அ.சா.ஆ.4/PW.3)** ஆகவும், பார்வைமகஜர் **(அ.சா.ஆ.5/PW.3)** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

தொடர்ந்து இந்த வழக்கில் சாட்சிகளான புகார்தாரர் கணேசன் மற்றும் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் எதிரிகள் தங்கராஜ், மணி, கருப்பாயிஆகியோர் தலைமறைவாகிவிட்டதால் கைது செய்யப்படவில்லை. பின்பு வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச சட்டபிரிவுகள் 294(b), 324 கீழ் 18.09.2018 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து, 29.07.2022 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் சமரச மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு, எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor